Registered as a Newspaper

'KLEEN KHUT'
* தரமான ரேனியோ பிரதிகள்
* தெளிவான போட்டோ ஸ்ரட் பிரதிகள்
* விரைவான தமிழ் ஆங்கில தட்டெழுத்து வேலைகளுக்கு நாடுங்கள்:
'கிளீன் கட்'
239. மின்சார நிலைய வீதி, யாழ்நகர். தொலைபேசி; 22823

# உதயன்

விலை ரூ. 1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

'கிளீன் கட்'
நவ நாகரிகத்திற்கேற்ப
* பெண்கள் குழந்தைகளுக்கான உடைகள் குறுகிய காலத்தில் தைத்துக் கொடுக்கப்படும்
'KLEEN KHUT'
239, Power House Road, JAFFNA.
TELE:- 22823

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸ்ரீ மாசி மீ 27 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 29 (11-03-1986) UTHAYAN - LIVELY TAMIL DAILY கதிர்:97

வடக்கு, கிழக்கில்

# குண்டு வீச்சு வானதாக்குதல் நிறுத்தப்படும்?

— கொழும் பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, மார்ச் 11

வடக்கு, கிழக்கு பகுதிகளில் நடத்தப்பட்டு வரும் குண்டு விச்சும், வானத் தாக்குதலும் நிறுத்தப்படுமா?

இது சம்பந்தமாக அரசாங்கத்தின் அதி உயர்மட்டம், நேற்று பாதுகாப்புப் படை முக்கியஸ்தர்களுடன் ஆலோசித்ததாக மிகவும் நம்பிக்கையாக அறியவந்துள்ளது.

விமானத்தில் இருந்து குண்டு வீசுதல், மற்றும் விமானம், ஹெலிக்கொப்டர்கள் ஆகியவற்றிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தல் ஆகிய வானத்தாக்குதலகளை இப்போதைக்கு நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டதாக விஷயமறிந்த வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இந்த உத்தரவு வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவ முகாம்களுக்கு அனேகமாக இன்று தெரியப்படுத்தப்படலாம் என்று நேற்றிரவு பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஜெனிவாவில் நடக்கும் ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் இலங்கையில் நடக்கும் குண்டு விச்சு, விமானத்தாக்குதல்கள் குறித்துக் கண்டனம் தெரிவிக்கப்பட்டதும் —

இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸித் இந்தியாவில் தங்கி நின்ற பின்னர், இங்கு வந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை — ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேசினார் என்பதும் தெரிந்தவையே.

## வடபகுதி மீனவருக்கு நிவாரணம்: ரூ. 200, ரூ. 250

கொழும்பு, மார்ச் 11

வட பகுதிக் கடலில் மீன் பிடித்தல் தடை செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மாதாந்த நிவாரணப் பணம் வழங்கப்படும்.

பாதிக்கப்பட்ட மீனவருக்கு உணவு முத்திரைகள் வழங்க ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தேசிய பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

உணவு முத்திரையோடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## கடுமைக்கு கடுமை!

கொழும்பு, மார்ச். 11

இலங்கையின் கண்டன அறிக்கைக்கு இந்திய அரசு கொடுத்த பதில் வழமைக்கு மாறான முறையில் கடுமையான தொனியில் அமைந்து உள்ளது.

இப்படி இந்தியாவில் உள்ள இலங்கைத்தூதுர் பேர்னட் திலகரத்தின கூறியதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## கனரக வாகனங்கள் அனுராதபுரம்வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 11

கண்ணி வெடி பற்றி முன்கூட்டியே அறிக்கை கொடுக்கக் கூடிய கனரக வாகனங்கள், பீரங்கி வண்டிகள் அடங்கிய 16 வாகனங்கள் நேற்று நண்பகல் கொழும்பில் இருந்து அனுராதபுரம் வந்தடைந்தன.

அனுராதபுரம் இராணுவ முகாமில் நேற்று நண்பகல் இவை நிறுத்தப்பட்டிருந்தன.

கைது செய்யப்படுவோரை பாதுகாப்பாக அடைத்து வைக்கும் வாகனங்களும் இவற்றில் அடங்கி இருந்தன.

## சீன ஜனதிபதி வருகிறார்

கொழும்பு, மார்ச் 11

சீன ஜனாதிபதி லீ ஸியானின் இன்று இலங்கை விஜயம் செய்கிறார்.

இரண்டு சிரேஷ்ட அமைச்சர்கள் உட்பட 16 அரச பிரதிநிதிகள் அவருடன் வருகை தருகின்றனர்.

லலித் சொல்கிறார்

## கூட்டணியினர் பேச்சுக்கு வரவேண்டிய தேவையில்லை

### தமிழ்மொழி மாநிலம் தமிழ் ஈழத்துக்கு அத்திபாரம்

கொழும்பு, மார்ச். 11

தமிழ்மொழி மாநிலக் கோரிக்கையை வலியுறுத்துவதானால் தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சுவார்த்தைக்கு வரவேண்டிய தேவை இல்லை.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி ஹோமாகம என்னும் இடத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் சொன்னார்.

அமைச்சர் அத்துலத்முதலி சொன்னதாவது:

தமிழ் மொழி மாநிலக் கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி முன் வைத்துள்ளது.

அது ஒருபோதும் நிறைவேறாது.

தமிழ் ஈழம் அமைப்பதற்கு அத்திபாரமாகத் தான் தமிழ் மொழி மாநிலக் கோரிக்கை அமைந்து உள்ளது.

தமிழ் மொழி மாநிலக்

(4ஆம் பக்கம் பார்க்க)



நிம்மி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கனேடிய தூதுவர் உரை நிகழ்த்துவதை முதல் படத்திலும், நிகழ்ச்சிக்குத் தூதுவர் அழைத்து வரப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (செய்தி நான்காம் பக்கத்தில்) (படப்பிடிப்பு:- சன். ஜோண்சன்)

## சுபநேரம்

11- 3- 1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10.53 முதல் 12 23வரை

ராகுகாலம்:
3.23 முதல் 4.53 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## தூதுவர்முன் கண்ணீர்விட்ட பெண்!

யாழ்ப்பாணம், மார்ச் 11

கனடா தூதுவர் முன்னிலையில், தமிழ் அன்னை ஒருவர் கண்ணீர் விட்டு அழுதார்.

நேற்று கனடா தூதுவர் திரு கொலெகொட் யாழ். பிரஜைகள் குழுவினரை அழைத்து, அவர்களுடன் உரையாடிய போது மனதை உருக்கும் இந்த நிகழ்ச்சி இடம் பெற்றது.

படையினரால் கைது செய்யப்படுபவர்கள் காணமற் போவது, விமானத் தாக்குதலால் பச்சிளம் பாலகர்கள் கொல்லப்பட்ட சம்பவங்கள் ஆகியவற்றை அன்னையர் முன்னணிப் பிரதிநிதிகள் கனடா தூதுவரிடப் விபரமாகஎடுத்துச் சொன்னார்கள்.

அச்சமயம் மனம் பொறுக்க இயலாது ஓர் அன்னை தூதுவர் முன்னால் கண்ணீர் விட்டழுதார்.

# கனேடிய தூதுவர் யாழ். சம்பவங்களின் விவரம் கேட்டறிந்தார்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடந்த சம்பவங்கள் பற்றி, யாழ் பிரஜைகள் குழுவினரை அழைத்து கனடா நாட்டுத் தூதர் டி. எம். கொலகொட் கேட்டு அறிந்து கொண்டார்.

ஒன்றரை மணித்தியாலமாக நடந்த இச்சந்திப்பில் பிரஜைகள் குழு தெரிவித்த விவரங்களை, குறைகளை, பாதிப்புகளைத் தூதரும் அவரது செயலாளரும் அக்கறையுடன் குறித்துக் கொண்டனர்.

தூதர் திரு. கொலகொட் துருவித் துருவி பல விஷயங்களை பிரஜைகள் குழுவினரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

யாழ் பிரஜைகள் குழுவினரைச் சந்திக்கும் விருப்பத்தைக் கனடா தூதர் திரு. கொலகொட் கடந்த வெள்ளிக்கிழமையே தெரிவித்திருந்தார்.

அதைத் தொடர்ந்து நேற்று தூதரைச் சந்திக்க யாழ் பிரஜைகள் குழு ஒப்புக் கொண்டது.

அதன்படி சந்திப்பு யாழ் செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்றது.

யாழ் பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிர

(4ஆம் பக்கம் பார்க்க)

## முகாமிலிருந்து வெளியே, வந்த சிப்பாய்கள்

நல்லூர், மார்ச் 11

ஞாயிறு இரவு யாழ் கோட்டை முகாமில் இருந்து யாழ் நீதிமன்றம் வரை கறுப்புச்சட்டைச் சிப்பாய்கள் வந்தனர் என்று கூறப்படுகிறது.

இரவு எட்டுமணி அளவில் சுமார் 25 கறுப்புச் சட்டைச் சிப்பாய்கள் காணப்பட்டனராம்.

இவர்கள் பின்பு முகாமுக்கு திரும்பிவிட்டனர் என்று கூறப்படுகிறது.



உப்பிடி நாலு நாட்டுத் தூதுவர்மார் இஞ்சை வந்து நிலைமையை நேரிலை பாத்துக்கொண்டு போய்ச்சினம் எண்டா, லங்கா புவத்தின்ரை திரிபுதாளம் எல்லாம் நல்லா விளங்கிவிடும்...!

# பன்குளத்தில் எட்டு அரச ஊழியர்கள் சுட்டுக் கொலை!

திருகோணமலை, மார்ச் 11

திருகோணமலை, பன்குளம் பகுதியில் நாமல்வத்தை என்ற இடத்தில் வைத்து நேற்று பிற்பகல் சுமார் 2 மணி அளவில் எட்டு அரச ஊழியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மூன்று பேர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிபந்தனையற்ற போர் நிறுத்தத்துக்கு இலங்கை உடன்பட வேண்டும்

### கருணநிதி கோரிக்கை

திருச்சி, மார்ச் 10

நிபந்தனையற்ற போர் நிறுத்தம் ஒன்றுக்கு இலங்கை அரசு உடன்பட வேண்டும். இல்லை என்ருல் இலங்கை அரசுடனை சகல அரசியல், பொருளாதார உறவுகளையும் இந்தியா துண்டித்து விட வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணநிதி நேற்று திருச்சியில் இப்படித் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளில் ஒன்று ஈழத்தமிழ் மக்களை அழிவில் இருந்து பாதுகாப்பதுமாகும் என்றும் கலைஞர் சொன்னர்.

## பறையனலங்குளத்தில் வேட்டு! குண்டுவெடிப்பு!!

யாழ்ப்பாணம், மார்ச் 11

வவுனியா பறையனலங்குளத்தில் ஆயுதப் படையினரால் முகாமிலிருந்து பல பகுதிகளை நோக்கி வேட்டுக்களும், மோட்டார் ஷெல் குண்டுகளும் தீர்க்கப்பட்டன.

கடந்த ஞாயிறு இரவு இரண்டு மணியளவில் அடுத்தடுத்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனல் நேற்று மன்னர் வவுனியா வீதியில் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. அப்பகுதியால் சென்ற சில வாகனங்கள் தாக்கப்பட்டன.

பறையனலங்குளத்தில் போராளிகளினல் சேதமாக்கப்பட்டதாகக் கூறப்படும் ஹெலிக்கொப்டர் இன்னமும் முழுதாகத் திருத்தி முடிக்கப்படவில்லை.

இப்பகுதியில் தொடர்ந்து நிலவும் பதற்றத்தினல் கன்னட்டி, பறையனலங்குளம், மருக்காரம்பளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி காடுகளுக்குள் தஞ்சம் அடைந்திருக்கின்றார்கள்.

## பார்த்தசாரதியின் எதிர்காலம் என்ன?

### பல்வேறு ஊகங்கள்

புதுடில்லி, மார்ச் 10

இந்திய வெளிவிவகார கொள்கை வகுப்புத் தலைவர் பதவியில் திரு. ஜி. பார்த்தசாரதி தொடர்ந்தும் இருக்கிறரா?

புதுடில்லி வட்டாரங்களில் இக்கேள்வி எழுந்துள்ளது.

பெப்ரவரி 22ஆம் திகதியே கொள்கை வகுப்புக்குழுத் தலைவர் பதவியை திரு ஜி. பார்த்த

(4ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் தேடுதல் வேட்டை நான்கு பேர் பலி!

— மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் —

மட்டக்களப்பு, மார்ச் 11

மட்டக்களப்பு பகுதியில் நேற்று பிரபல சிங்கள கட்டட ஒப்பந்தக்காரர் ஒருவரைக் கடத்த எடுக்கப்பட்ட முயற்சியை அடுத்து சிருடையினர் பல இடங்களைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்கள்.

இந்தத் தேடுதல் வேட்டையின்போது நான்கு தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இந்தக் கோயில் ஒன்று சேதமாக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றி சொல்லப்படுவதாவது:-

நேற்றுக்காலை மட்டக்களப்பு-கல்முனை வீதியில்

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'அந்த ஏழு நாட்கள்' கவிஞரின் நல்ல நேரம்

கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம் 'அந்த ஏழு நாட்கள்' படத்தின் மூலம் திரையுலகுக்கு வந்தவர். படத்தில் பாடிய பாடல் "கவிதை அரங்கேறும் நேரம்"

கவிதை 'அரங்கேறிய' நேரம் அவருக்கு நல்ல நேரமாகவே இருந்தது. அத்தோடு அதிஷ்டமும் அவருடன் சேர்ந்து கொண்டது.

கவிஞர் சண்முகம் சொல்கிறார்:

நான் பள்ளியில் படித்த போது பாரதியார், பாரதிதாசன் கவிதைகளை மிகவும் ரசித்துப் படிப்பேன்

அது நாளடைவில் நாமும் கவிதை எழுதினால் என்ன என்ற ஒரு எண்ணத்தை உண்டாக்கியது.

திராவிட நாடு, குயில் பத்திரிகைகளில் பணியாற்றியது என் கவிதைத் திறனை கூர் பிடித்துக் கொள்ள உதவியது.

1968 இல் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டு நான் அரங்கேற்றிய கவிதைக்கு முதல் பரிசு கிடைத்தது. பேரறிஞர் அண்ணாவின் கைகளினால் தங்கப் பதக்கமும் பெற்றேன்.

தொலைக்காட்சியில் நாட்டுப்புற பாடல்களை ஒளிபரப்ப ஆரம்பித்தபோது நான் அவர்களுக்கு அதைக் கிராமிய மெட்டுகளிலேயே அமைத்துத் தந்தேன்.

தற்போது ஆறு படங்களுக்குப் பாடல் எழுதிக்கொண்டு இருக்கிறேன்.

இதுவரை நான் எழுதிய எல்லாப் பாடல்களும் வரவேற்படைந்துள்ளன. என் பாடல் இடம் பெற்ற படங்களும் வெற்றியே பெற்றிருக்கின்றன.

"ஆண் பாவம்" படத்தில் கொல்லங்குடி கருப்பாயி பாடும் நாட்டுப்புற பாடல்களை இயற்றும் வாய்ப்புக் கிடைத்தது.

எல்லா இசையமைப்பாளர்களின் இசையமைப்பிலும் என் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

பாரதியார், பாரதிதாசன், சுரதா, அப்துல் ரகு ஆகியோர் எனக்குப் பிடித்த கவிஞர்கள்

இவர்களிடம் இருந்த வித்தியாசமான பாணியே அதற்குக் காரணம் என்கிறார் அவர்.

தினசரி சினிமா

## ரஷ்ய தலைமைப் பீடத்தில் பல புதிய முகங்கள்

மாஸ்கோ, மார்ச் 10

ரஷ்ய தலைமை பீடத்தில் புதிய முகங்கள் இடம் பெற்றுள்ளன.

வாஷிங்டன் தூதுவர் அனடலி டொப்ரினின், பெண் தொழிற்சங்கவாதி ஆகியோரும் இவர்களுள் அடங்குவர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் 27ஆவது காங்கிரஸ் மாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட 307 அங்கத்தவர்களைக் கொண்ட மத்திய கமிட்டியில் 136 பேர் புதியவர்கள்.

# பிலிப்பீன்ஸில் புரட்சி அரசு

## 6 மாத காலத்துக்கு பின் புதிய அரசமைப்பு

மணிலா, மார்ச் 10

பிலிப்பீன்ஸில் முதல் ஆறு மாத காலம் புரட்சி அரசு ஒன்றுதான் பதவி வகிக்கும்.

ஆறு மாதங்களுக்குப் பின்னரே புதிய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு சிவில் அரசு பதவி ஏற்கும்.

இப்படி பிலிப்பீன்ஸ் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

100 தினங்களுக்குள் 60 உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய சபை புதிய அரசமைப்புச் சட்டத்தை தயாரிக்கும்.

அப்புதிய அரசமைப்புச் சட்டம் பொதுமக்களின் அங்கிகாரம் பெற்ற பின்னரே நடைமுறைக்கு வரும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

இதனிடையில் பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி திருமதி கொரேசன் அக்கியூனோ முதலாவது மந்திரிசபைக் கூட்டத்தை கடந்த திங்கள் (நேற்று) நடத்தினர்.

அதன் பின்னர் ஜனாதிபதியை ஆஸ்திரேலியாவின் வெளிநாட்டமைச்சர் வில்லியம் ஹேடன் சந்தித்தார்.

திருமதி அக்கியூனோ பதவிக்கு வந்த பின்னர் சந்தித்த முதலாவது வெளிநாட்டமைச்சர் திரு. ஹேடன் ஆவார்.

இராணுவ உதவி அல்லாத உதவிகளை பிலிப்பீன்ஸுக்கு வழங்க ஆஸ்திரேலியா முன் வந்துள்ளதாக வெளிநாட்டமைச்சர் ஹேடன் அறிவித்தார்.

### ரஷ்யாவிடம் அமெரிக்கா கோரிக்கை

ஐ. நா. மார்ச் 10

ஐ. நா. ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் ரஷ்ய குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை 40 சதவீதமாகக் குறைக்கும்படி அமெரிக்கா ரஷ்யாவைக் கேட்டுள்ளது.

கூடுதலாக ரஷ்யர்கள் ஐ நா. சபையில் அங்கம் வகிப்பது அமெரிக்கப் பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்றும் அமெரிக்கா கூறியது.

### பிலிப்பீன்ஸ் சம்பவங்கள்:

## மனித உரிமை ஆணைக்குழு விசாரிக்காது

ஜெனிவா, மார்ச். 10

பிலிப்பீன்ஸ் நாட்டில் இடம்பெறும் சம்பவங்கள் பற்றிய விசாரணைகளை ஐ. நா மனித உரிமை ஆணைக்குழு மேற்கொள்ளாது.

ஜனாதிபதியாக திருமதி கொரேசன் அக்கியூனோ பதவி ஏற்ற பின்னர் தான் ஐ நா. மனித உரிமை ஆணைக்குழு இந்த முடிவை எடுத்து இருப்பதாகக் கூறப்படுகிறது.

திரு. மார்க்கோஸின் ஆட்சிக்காலத்தில் பிலிப்பீன்ஸில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடந்ததாகக் கூறி மனித உரிமை சாசன ஆணைக்குழு விசாரணை நடத்தி வந்தது தெரிந்ததே.

### பெனுஸிருக்கு அரசியல் சுதந்திரம்

இஸ்லாமாபாத், மார்ச் 10

குறிப்பிட்ட வரையறைக்குள் செல்வி பெனுஸிர் பூட்டோ அரசியல் சுதந்திரத்தை அனுபவிக்கலாம் என்று பாக்கிஸ்தான் பிரதமர் முகமட் கான் ஜுனெஜோ சொன்னார்.

செல்வி பெனுஸிர் பூட்டோ நாடு கடத்தப் பட்டுள்ளார்.

### தமிழ்நாடு நிதிமசோதா

சென்னை, மார்ச் 10

தமிழ்நாடு அரசின் நடப்பாண்டு நிதி மசோதா இம்மாதம் 17 ஆம் திகதி சட்ட சபையில் சமர்ப்பிக்கப் படும்.

தமிழ்நாடு நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் நிதி மசோதாவைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றுவார்.

## குற்றச் சாட்டுக்கு வால்ட்ஹெய்ம் மறுப்பு

வியன்னா, மார்ச் 10

நாஸி யுத்தத்தில் யூதர்களுக்கெதிரான குற்றச் செயல்களில் தான் ஈடுபடவில்லை என்று ஐ நா. சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் குர்ட் வால்ட் ஹெய்ம் கூறினார்.

உலக யூதகாங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு எழுதிய கடிதம் ஒன்றில் முன்னாள் செயலாளர் நாயகம் இத்தகவலை வெளியிட்டார்.

ஆஸ்திரிய நாட்டு ஜனாதிபதி பதவிக்கு திரு வால்ட்ஹெய்ம் போட்டியிட இருக்கிறார்.

# வெளி உலகில்

## கேரள சட்டசபைத் தேர்தல் வருட நடுப்பகுதியில்

எர்ணுகுளம், மார்ச் 10

கேரள மாநிலச் சட்டசபைத் தேர்தல் 1986 நடுப்பகுதியில் நடைபெற உள்ளது.

இத்தகவலை கேரள முதலமைச்சர் திரு. கருணாகரன் வெளியிட்டார்.

இந்திரா காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி கேரள மாநிலத்தைக் கடந்த 45 மாதங்களாக ஆட்சி செய்து வருகிறது.

மாநில சட்டசபையின் பட்ஜட் தொடர் கூட்டம் முடிந்த பின்னர் இடைத்தேர்தல் நடத்தப்படும்.

### கைதிகளை தென் ஆபிரிக்கா விடுவித்தது

ஜோஹன்னஸ்பேர்க், மார்ச் 10

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சகல கைதிகளையும் தென்ஆபிரிக்கா விடுதலை செய்தது.

கடந்த ஜுலையில் இருந்து இடம் பெற்ற கலவரங்களைத் தொடர்ந்து சுமார் 300 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

### அமெரிக்க விசாரணைக்குழு சிபார்சு

வாஷிங்டன், மார்ச். 10

பயங்கரவாதத்துக்கு எதிராகச் சட்டரீதியான பலாத்காரம்தான் பாவிக்கப்படவேண்டும். கண்டபடி பதில் தாக்குதல்களை, பயங்கரவாதிகளுக்குப் புகலிடம் கொடுக்கும் நாடுகள் மேல் மேற்கொள்ளக்கூடாது.

இப்படி அமெரிக்க அரசு விசாரணைக்குழு ஒன்று சிபார்சு செய்துள்ளது.

### பாமிக்கு நோபல் பரிசு?

கோப்பன்ஹேகன் மார். 10

சென்ற வெள்ளிக்கிழமை கொலைசெய்யப்பட்ட சுவீடன் தேசத்து சோஷலிச பிரதமர் ஒலவ் பாமிக்கு இவ்வாண்டு நோபல் பரிசு வழங்கப் படலாம்.

நோர்வே தேசத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் இயக்கத்தினர் ஆகியோர் இந்தச் சிபார்சை வழங்கி உள்ளனர்.

### மத்திய கிழக்கு மீண்டும் சமரச முயற்சி

ஐ.நா, மார்ச் 10

மத்திய கிழக்குப் பிரச்சினை குறித்து சமரச நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்துவருகிறது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளர் திரு. ரிச்சர்ட் மெர்பி இதுசம்பந்தமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயஞ்செய்ய உள்ளார்.

# தமிழர் இருவர் சுட்டுக் கொலை

## அம்பாறையில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 11

அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரண்டு தமிழர்கள் துப்பாக்கிச் சூடு தாக்கி மரணமானார்கள்.

கடந்த சனிக்கிழமை மாலை இச்சம்பவம் நடைபெற்றது.

பொலிஸ் கொமாண்டோக்கள் ஜீப்பில் வந்து கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் இரண்டு பேர் சென்று கொண்டிருந்ததைக் கண்டார்களாம்.

பின்னர் அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது

இரண்டு தமிழரும் அந்த இடத்திலேயே மரணமானார்கள்.

அவர்களின் சடலங்களையும் கொமாண்டோக்கள் எடுத்துச் சென்றனர்.

பின்னர் நடத்தப்பட்ட தேடுதலில் 6 தமிழர்கள் அப் பகுதியில் கைது செய்யப்பட்டனர்.

### ஹேலிஸ் பற்றி அதிபர்களுக்கு சுற்றறிக்கை

மானிப்பாய், மார்ச் 11

76 ஆண்டுகளின் பின்னர் இவ் வருடத்தில் தோன்றியிருக்கும் ஹேலிஸ் வால் நட்சத்திரத்தை இம்மாத இறுதி வாரத்தில் பார்க்கக்கூடியதாக இருக்கும்.

பாடவிதான அபிவிருத்தி நிலையத்தினர் சுற்றறிக்கை மூலம் பாடசாலை அதிபர்களுக்கு இதனை அறிவித்துள்ளனர்.

நில அளவைப் பகுதியினரினதும் நீர்ப்பாசனப் பகுதியினரினதும் உதவியுடன் இவற்றைப் பார்வையிடுமாறும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாத இறுதி வாரத்தில் இவ் வால் நட்சத்திரத்தினை இரவு 11 மணியிலிருந்து ஒரு கட்டமாகவும், அதிகாலை நாலரை மணிக்கு இரண்டாம் கட்டமாகவும் அவதானிக்கக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

### வகுப்புகள்

தொலைக்காட்சி பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்:- 1-4-1986 பயிற்சிக் காலம் 6 மாதம் கிழமை நாட்களில் இரு தினங்கள் விண்ணப்ப முடிவு திகதி 20-3-86 கட்டணம் மாதமொன்றிற்கு ரூபா 150. மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். திரு. எஸ். குணாளன், ரெலி கோணர் சாவகச்சேரி.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### இந்து மாமன்றம் கண்டனம்

கொழும்பு, மார்ச்11

நயினாதீவு நாகபூஷணி அம்மன் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அகில இலங்கை இந்து மாமன்றம் கண்டித்து உள்ளது

### திருச்சபையின் சேஷப் பணி

மானிப்பாய், மார்ச் 11

சண்டிலிப்பாய்க் கிராமத்தில் தென் இந்திய திருச்சபையின் யாழ்ப்பாண பேராயர் வணக்கத்துக்குரிய பிதா டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் கிராம மக்களின் நலன்கருதி சேஷப் பணியை ஆரம்பித்துள்ளார்.

இப்பணிக்கென இப் பகுதியில் ஒரு காணியை வாங்கி, கஷ்டப்பட்ட ஏழைப் பிள்ளைகளுக்கு உணவு வசதி, கல்வி வசதி வழங்கி மேற்படி சேஷப்பணியை (வேதத்தைப் பரப்பும் பணி) ஆரம்பித்துள்ளார்.

### தங்கவேலாயுதபுரம் படுகொலை:

# கண்காணிப்புக்குழு விசாரணை நடத்துமா?

மட்டக்களப்பு, மார்ச்.11

அக்கரைப்பற்று தங்கவேலாயுதபுர படுகொலை சம்பந்தமான விசாரணையை மேற்கொள்ள யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு இப்பகுதிக்கு வருகை தரலாமென பிரஜைகள்குழு வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றன.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணையை மேற்கொள்ளுமாறு மட்டக்களப்பு, அக்கரைப்பற்று பிரஜைகள் குழுக்கள் ஜனாதிபதியை கோரின.

இந்நிலையில் ஜனாதிபதியினால் முப்படை அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவினர் இப்பகுதிக்கு வருகை தந்த சமயம் பிரஜைகள் குழுக்கள் சாட்சியமளிக்க மறுத்ததோடு கண்காணிப்புக்குழு முன் சாட்சியமளிக்க தயார் என அறிவித்தன.

இந்நிலையில் கண்காணிப்புக்குழுவிடம் ஏற்கனவே தந்திமூலம் புகார் செய்த பிரஜைகள் குழுக்கள் இரண்டாவது தந்தியில் வருகை தர வேண்டுமென வலியுறுத்தியுள்ளன.

## அடக்குமுறைச் சட்டங்களை விலக்க அரசை நிர்ப்பந்தியுங்கள்

### தென்னிலங்கை புத்தி ஜீவிகளுக்கு வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 11

அடக்குமுறைச் சட்டங்களை விலக்கிக் கொள்ளும்படி அரசை நிர்ப்பந்திக்குமாறு மாணவருக்கும் புத்திஜீவிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சகல சமூகங்களையும் கொண்ட தென்னிலங்கையைச் சேர்ந்த சுமார் 200 பிரமுகர்கள் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

மதகுருமார்கள், தொழிற் சங்கவாதிகள், கல்விமான்கள், சட்ட நிபுணர்கள் ஆகியோர் இவ்வேண்டுகோளில் கையொப்பமிட்டுள்ளனர்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியன மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கின்றன. நாடு இராணுவ மயமாக்கப்படுகின்றது

பாதுகாப்புச் செலவீனம் அதிகரிக்கின்றது. இதனால் இருதரப்புக்கும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பொருளாதார, அரசியல், சமூக பாதிப்புக்களை மூடி மறைக்கவே அரசு அடக்குமுறைச் சட்டங்களை ஏவி விடுகின்றது.

இப்படி அந்த வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது.

### பஸ்சேவை ஆரம்பிக்க கோரிக்கை

திருகோணமலை,மார்ச் 11

திருமலை-யாழ்ப்பாணம் பஸ்சேவையை ஹபரணையூடாக மீண்டும் ஆரம்பிக்கும்படி திருமலையில் அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் அரச அதிபருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்.


முன்னர் நடத்தப்பட்டு வந்த இந்த பஸ் சேவை வன்செயல்கள் அதிகரித்ததையடுத்து நிறுத்தப்பட்டது.

### கஜனுக்கு கண்ணீர் அஞ்சலி

பலாலி, மார்ச் 11

கடந்த சனிக்கிழமை அச்செழு அம்மன் கோயிலடி வெளியில் ஹெலிக் [illegible] பதியான அச்சுவேலி-வளலாய் கிராமத்தைச் சேர்ந்த தமிழீழ விடுதலைப் புலி இயக்கப் போராளி இரத்தினசபாபதி கணேசகுமார் (கஜன்) என்பவ [illegible] மக்கள் கண்ணீர் அஞ்சலி ஒன்றினை வெளியிட்டுள்ளார்கள்.

### மக்கள் முகம்



### அம்மன் ஆலய நிர்வாகிகள்

கிளிநொச்சி, மார்ச் 11

கிளிநொச்சி உதயநகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய நடப்பு வருட நிர்வாகிகள் வருமாறு :-

தலைவர் இ. தம்பிராஜா, உபதலைவர் சி. இரகுநாதன், செயலாளர் சு. புண்ணியமூர்த்தி, உப செயலாளர் க. பூபாலசிங்கம், பொருளாளர் அ. தங்கையா, கணக்காய்வாளர் ஆ. க. கனேஷ்.

ஐந்து பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவாகினர்.

### கிணற்றில் வீழ்ந்த சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

முருகேசு சாந்தகுமார் என்னும் 7 வயதுச் சிறுவன் கிணற்றில் விழுந்ததால் மரணமானார்.

யாழ்ப்பாணம் வெள்ளாந்தெருவைச் சேர்ந்த இச்சிறுவன் ஞாயிறு மாலை கிணற்றில் குளித்துக் கொண்டிருக்கும் போது தவறுதலாகக் கிணற்றில் விழுந்தார்.

### சமாதான சபை உறுப்பினர்

சுன்னாகம், மார்ச் 11

மல்லாகம் பிரஜைகள் குழுவின் சமாதான சபை புதுவருட உத்தியோகத்தர் வருமாறு :-

தலைவர்: சட்டத்தரணி எ. பி. நடராஜன், உதவி தலைவர்: திரு. க. சிவசுப்பிரமணியம், செயலர்: திரு. செ. மாணிக்கசுந்தரம், உபசெயலர்: ச. சபாநாயகம்.

திருவாளர்கள் ந. திருநாவுக்கரசு, வி நடராஜா, ச. தேவதாசன், ம. அல்பிரட், சி. இராஜேந்திரம், பொ. ஸ்ரீ அப்பாசாமி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாவர்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அழைப்பு

பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகர தியணைப்புச் சேவை

கனேடிய உயர் ஸ்தானிகர் மாண்புமிகு டீ.எம்.கொலகொட் அவர்களால்

12 - 03 - 1986 புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி. வி. கே. சிவஞானம், மாநகர ஆணையாளர்.

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம். 11-03-1986.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

மலிவு விற்பனை இரும்புப் பொருட்கள்

இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்கள், பாவனையாளர்களுக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்!

10-3-86 தொடக்கம் இல. 115, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள எமது சங்கக் கிளையில் சகல இரும்புப் பொருட்களும் கொள்விலைக்கு விற்பனை செய்துவருகின்றோம். வர்த்தகர்கள், பாவனையாளர்கள் தமக்குத் தேவையான இரும்புப் பொருட்களை மேற்படி எமது கிளையில் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பொது முகாமையாளர்.

127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 09-3-86.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேசவழமைச் சட்டத்தால் சிங்களவருக்குப் பாதகமா?

**உதய சங்கற்பம்**

மல்லிகைக் கொடி வளரும் மண்ணிலே மணம் இல்லை; அதற்கு ஊற்றும் நீரிலே மணமில்லை; இலையிலே மணம் இல்லை; மொட்டிலே மணம் இல்லை; அது மலர்ந்து பூவான பின்னர்தான் மணம் வீசுகிறது.

நறுமணத்தின் மத்தியில் வாழ விரும்பும் மனிதன் உள்ளத்தில் மணம் வீசுகிறதா?

மல்லிகை போன்று மனிதன் வாழவேண்டும்.

- குன்றக்குடி அடிகளார்.

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22078

11-03-86 த. பெ. 23

## மனித உரிமை மாநாட்டில் நீதியின் பக்கம் ஒலித்த குரல்

தென்னிலங்கையைச் சேர்ந்த சுமார் இருநூறு பிரமுகர்கள் புதிய முயற்சியில் இறங்கி இருக்கிறார்கள்.

தமிழருக்கு எதிராக இயற்றப்பட்ட அடக்குமுறைச் சட்டங்களை ரத்துச் செய்ய வேண்டும், அரச படைகளைக்கொண்டு தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்துவதை நிறுத்த வேண்டும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும். இராணுவச் செலவுகளைக் குறைத்து நாட்டின் வளத்தைப் பெருக்க வழிசெய்ய வேண்டும்.

இவ்வாறு அரசாங்கத்தை வற்புறுத்துவது அவசியம். புத்திஜீவிகளும் மாணவர்களும் அரசாங்கத்தைத் தொடர்ந்து இதற்கு வலியுறுத்தவேண்டும்.

தென்னிலங்கைப் பிரமுகர்கள் 200 பேர் ஈடுபட்டிருக்கும் புதிய முயற்சி இதுதான்.

மேற்கண்ட கோரிக்கைகளைத் தாம்மட்டும் அரசாங்கத்தின்முன் வைக்காமல் ஏனையோரையும் அதற்குத் தூண்டுவதாக இது அமைந்துள்ளது.

அடக்குமுறைச் சட்டங்களை நீக்கி, தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண வேண்டும் என்பதைப் பரந்த அளவில் பிரபல்யப்படுத்தி, அதன்மூலம் அரசாங்கத்தைச் செயலில் இறங்க வைக்கலாம் என்ற உத்தேசத்துடனேயே அவர்கள் இப்படி ஒரு இயக்கத்தை ஆரம்பித்திருக்க வேண்டும்.

இருநூறு பிரமுகர்களின் முயற்சியால் அரசாங்கம் உருப்படியாக எதையும் செய்து விடும் என்று பெரிதாக எதிர்பார்க்க முடியாததுதான்.

ஆனால் இந்தப் புது முயற்சி பலவகைகளிலும் சிறப்புடையது.

தமிழ்மக்கள் அடக்கிஒடுக்கப்படுகிறார்கள் என்பதைப் பெரும்பான்மை மக்களில் நியாய சிந்தையுள்ள ஒருசாராராவது உணர்ந்திருக்கிறார்கள்.

தமிழ்மக்களே தமக்கு நேர்ந்துள்ள இன்னல்களை எடுத்துச் சொல்வதைவிட, இலங்கையில் வாழும் பெரும்பான்மை மக்களில் ஒருசிறு பகுதியினராவது அதனை எடுத்துச் சொல்லும்போது அதன் பரிமாணம் பெரிதாகிறது. ஏனைய பெரும்பான்மை மக்களும் தமிழர்களுக்கு நேர்ந்துள்ள கஷ்டங்களை அறிந்துகொள்ளும், உணர்ந்துகொள்ளும் வாய்ப்பு இதனால் உருவாகிறது.

அத்தோடு அரசாங்கத்தின் அநியாயத்தையும், படைகள் மூலம் செய்விக்கும் அட்டூழியத்தையும் வெளி உலகுக்கு மறைத்து வரும் உண்மை நிலையும் புரிந்துவிடும்.

இந்தச் சிறப்புகளைவிட மேலும் ஒரு அம்சத்தையும் குறிப்பிட்டாக வேண்டும். தமிழருக்கு எதிராகப் பாவிக்கவென இயற்றப்பட்டுள்ள அடக்குமுறைச் சட்டங்கள், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரச சார்பற்ற மக்கள் மீதும் பயன்படுத்தப்படலாம். அவ்வாறான அட்டூழியங்களை முன் எச்சரிக்கையாகத் தடுத்துவிட வேண்டும் என்று இந்தப் பிரமுகர்கள் தீர்க்க தரிசனத்துடன் உணர்ந்திருக்கிறார்கள் என்றும் கொள்ளலாம்.

எது எவ்வாறாயினும் உண்மையை நீண்ட காலத்துக்கு இருட்டில் வைத்திருக்க இயலாது. அது எப்படியும் வெளிச்சத்துக்கு வந்தே தீரும். இது இலங்கை அரசாங்கத்துக்கு மட்டுமன்றி ஒவ்வொரு தனிப்பட்டவர்களுக்கும் பொருந்தும்.

போராளிகள்மீது பதில்தாக்குதல் நடத்துவதாகக் கூறி அப்பாவித் தமிழ் மக்களை அரச படைகள் கொல்வதை இலங்கை அரசாங்கத்தால் மூடிமறைக்க முடிந்ததா?

நிராயுதபாணிகளான தமிழ்ப் பொது மக்களைக் கொன்றுவிட்டு, அதற்கு எதிர்மாறான ஆலாபரணத்தையும், விவரணத்தையும் இலங்கை அரசு கூறி வந்தது.

ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் பல வெளி நாடுகள் இலங்கை அரசுமீது விடுத்த கண்டனக் கணைகள், அவை உண்மையைக் கிரகிக்கவும், அந்த உண்மையை அடிப்படையாக வைத்து நீதிக்காக குரல் கொடுக்கவும் தவறவில்லை என்பதைப் புரியவைத்து விட்டன.

உண்மையை மூடி மறைக்கும் மந்த புத்தி இனியாவது இலங்கை அரசைவிட்டு அகலுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஐ. நா. கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதி உண்மையை எடுத்துக் கூறியதும், இலங்கை சார்பில் பூசி மெழுக முயற்சிக்கப்பட்டது. கருத்துப் பரிமாற்றத்தைச் சுற்றி வளைத்து, கூட்டத்தினரின் மனதைத் திசைதிருப்ப முயற்சிக்கப்பட்டது. ஆனால் அது பலிக்கவில்லை.

மிக முக்கியமான சர்வதேச அரங்கில் இலங்கையில் நடக்கும் அக்கிரமங்கள், அட்டூழியங்கள், அநியாயங்கள் பல நாடுகளாலும் அக்குவேறு ஆணிவேறாகப் புட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன.

இது தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க உண்டான ஓர் ஊற்றுக்கண் என்று கொள்ளலாம். இலங்கை அரசின் பொய்மை தோற்றுவிட்டதற்கும் இது முதலாவது அறிகுறி.

பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டு விடாது என்பதை இனியாவது இலங்கை அரசு உணர்ந்து உண்மை, நீதி, நியாயத்தின் பக்கம் பார்வையைத் திருப்புமா பார்ப்போமே!

---

தேசவழமைச் சட்டம்பற்றி மீண்டும் சிங்கள அரசியல் வாதிகள் பேசத் தொடங்கியிருக்கின்றார்கள்.

1983 வன்செயல்களின் பின்னர் பகுத்தறிவு அபிவிருத்திக் கமிட்டி ஒன்று தேசவழமைச் சட்டம் உட்பட தமிழரின் பல பிரச்சினைகளை ஆதியோடந்தமாக ஆராய்ந்து ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தது.

அந்தக் கமிட்டியில் பல அரசியல் கருத்துக்களைக் கொண்ட சிங்கள, தமிழ், இஸ்லாமிய, பறங்கிய சமூகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் அங்கம் வகித்தனர்.

தேசவழமைச் சட்டம் பற்றி அந்தக் கமிட்டியின் அறிக்கையில் கேள்வி பதில் ரூபத்தில் கூறப்பட்டுள்ளது.

கேள்வி; யாழ்ப்பாணத்தில் சிங்களவர் காணி வாங்க முடியாது என்றுகூறப்படுகின்றதே! அது உண்மையா?

பதில்: முஸ்லிம் பறங்கியர், சிங்களவர்கள் யாழ்ப்பாணத்தில் காணி வாங்கியுள்ளார்கள்.

கேள்வி: அப்படி என்றால் யாழ்ப்பாணத்தில் சிங்களவர் காணி வாங்க முடியாது என்ற நிலை பற்றி அடிக்கடி பேசப்படுகின்றதே!

பதில்; தேசவழமைச் சட்டத்தின்கீழ் கண்டிப்பான பொதுக்கொள்கை ஒன்று உண்டு. அதன்படி ஒரு காணி வெளியாருக்கு விற்கப்பட முன்னர் அதனைக் கூட்டு உரிமைக்காரர்கள் அல்லது கூட்டு வாரிசுகள் அல்லது அயலவர் வாங்கும் உரிமையைப் பெறுகின்றார்கள்.

### ஒரு கண்ணோட்டம்

இப்படி வெளியார் காணிவாங்குவது தவிர்க்கப்படுவது இனரீதியான செயல் அல்ல.

விவசாய சமூகம் ஒன்றுக்குத் தேவையான இயற்கைப் பாதுகாப்பே இதுவாகும்.

வெளிச் சந்தையில் காணி விற்கப்படும் முன்னர் அதன் உரிமையாளர் அறிவித்தல் கொடுப்பதுபோன்ற நடவடிக்கையே இது.

கேள்வி: தேசவழமை என்றால் என்ன?

பதில்: கண்டிச் சிங்களவரின் பரம்பரைச் சட்டங்கள் போன்றதே தேசவழமைச் சட்டமும்.

குடியேற்றக் காலத்துக்கு முந்தி இருந்தே தேசவழமைச் சட்டம் இருந்து வருகின்றது.

ஒரு சமூகத்தின் நடைமுறைப் பழக்கத்தை ஒட்டிய சட்டம் இது. யாழ்ப்பாணம் மாகாணத்தில் உள்ள மலபார் வழித்தோன்றல்களுக்கு உரியது இச்சட்டம்.

கேள்வி: அண்மைக் காலத்தில் மிகக் குறைவான சிங்களவர் வட மாகாணத்தில் குடியிருக்கின்றார்கள். இது ஏன்?

பதில்: யாழ்ப்பாணத்தில் மண்வளம் குறைந்து காணப்படுகிறது விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை அது ஈர்க்கவில்லை.

ஹப்பாந்தோட்டையில் தமிழர் மிகமிகக் குறைவாகவே உள்ளனர். அதுபோன்றுதான் யாழ்ப்பாணத்தில் சிங்களவரும் என்றும் வாதாடமுடியும்.

---



**பொய்யாமொழி**

குறள்:

நயன் ஈன்று நன்றி பயக்கும் பயன் ஈன்று

பண்பின் தலைப்பிரியாச் சொல்

பொருள்:

பிறர்க்கு நன்மையான பயனைத் தந்து நல்ல பண்பிலிருந்து நீங்காத சொற்கள் வழங்குவோனுக்கும் இன்பம் தந்து நன்மை பயக்கும்.

---

## மண்டைதீவு பிரஜைகள் குழு செயலாளர் தந்தி

மண்டைதீவு, மார்ச். 11

மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் ஜீ. சி. ஈ உயர் வகுப்புகளுக்கு கல்வி கற்பித்த ஆசிரியை திடீர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதால் மாணவர்கள் ஆசிரியர் இல்லாது மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

இவரது இடத்துக்கு புதிய ஆசிரியர் ஒருவரை உடன் நியமிக்குமாறு மண்டைதீவு பிரஜைகள் குழு செயலாளர் யாழ் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். சுந்தரலிங்கத்தைத் தந்தி மூலம் கோரியுள்ளார்.

## சிவராத்திரி பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 11

சரித்திரப் பிரசித்தி பெற்ற மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிவராத்திரி விழா மிகவும் அமைதியாக, பக்தி பூர்வமாக நடைபெற்றது.

வருடா வருடம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஒன்று கூடும் இந்த ஆலயத்தில் இம்முறை சுமார் எண்ணூறு பக்தர்களே சிவராத்திரி விழாவில் கலந்து கொண்டனர்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக தூர இடங்களில் இருந்து வந்த பக்தர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது.

எனினும் யாழ்நகரில், தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் சிவராத்திரி பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

பக்தர்கள் தங்கள் வசிப்பிடங்களுக்கு அருகில் உள்ள கோயில்களில் கூடி இரவு முழுவதும் கண் விழித்து வழிபாடு, தியானம், பஜனை ஆகியவற்றில் ஈடுபட்டனர்.

வழமைபோல் எல்லாக் கோயில்களிலும் சிவராத்திரிப் பூஜைகள் இடம் பெற்றன.

## சிறந்த அனுபவங்களைப் பெறும் மாணவனே முழுமனிதன் ஆகிறான்

யாழ்ப்பாணம்,மார்.11

சிறந்த அனுபவங்களைப் பெறும மாணவனே முழு மனிதனாக மாறுகிறான். இதை அடிப்படையாக வைத்து ஆசிரியர்கள் பணிபுரிய வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூர் மேற்கண்டவாறு சொன்னார்.

மல்லாவி மகாவித்தியாலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட பொருட்காட்சியின் விஞ்ஞானப் பிரிவை ஜனாப். மன்சூர் திறந்து வைத்தார்.

அவர்மேலும் சொன்னதாவது:

வெறும் பாடநூற் கல்வியை மாத்திரம் மாணாக்கருக்குப் போதிப்பதில் பயனில்லை.

கலை, கலாசாரத்தைக் கட்டிக் காப்பதற்கு மாணாக்கருக்கு நல்ல அனுபவங்களைக் கொடுக்கவேண்டும். எனவே ஆசிரியர்கள் பாடசாலையின் புற முயற்சிகளில் பூரணமாக ஈடுபட வேண்டியது அவசியம்

—இப்படி ஜனாப் மன்சூர் சொன்னார்.

கலைப்பிரிவுப் பொருட்காட்சியை வட்டாரக் கல்வியதிகாரி திரு. மு. சிவானந்தம் திறந்து வைத்தார்.

## வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலய மாணவர்கள் சாதனை

யாழ்ப்பாணம், மார்ச் 11

கிரிமலை சிவநெறிக் கழகம் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், வேலணை முதலிய கல்வி வட்டார மாணவர்களுக்கென நடத்திய நாவன்மை, பண்ணிசைப் போட்டிகளில் வண்ணார் பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலய மாணவர்கள் பல பரிசுகளைப் பெற்றனர்.

பாலர்பிரிவு ஆண்களுக்காகிய பண்ணிசைப் போட்டியில் ச சுதர்சன் முதலாம் இடத்தையும் ஆரம்பப் பிரிவுப் போட்டியில் ச. நாகராஜன் முதலாம் இடத்தையும் பே. சக்திவேல் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

பெண்களுக்காகிய ஆரம்பப் பிரிவு பண்ணிசைப் போட்டியில் அ. லிங்கா இரண்டாம் இடத்தையும் சு. ஜீவரோசாந்தி மூன்றாம் இடத்தையும் கீழ்ப்பிரிவுப் போட்டியில் சி. யாழினி மூன்றாம் இடத்தையும் பெற்றனர்,

நாவன்மைப் போட்டி பாலர்பிரிவில் பே. ஸ்ரீ துவாரகபாலகிருஷ்ணன் முதலாம் இடத்தையும் சு. சதானந்தன் இரண்டாம் இடத்தையும் ஆரம்ப பிரிவில் பே. துவாரகன் முதலாம் இடத்தையும் மு. சரவணபவன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

### பாதுகாப்பு வலயம்

## சீவல்தொழிலாளர்கள் பெரிதும் பாதிப்பு

பலாலி, மார்ச் 11

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயச் சட்டத்தால் தெல்லிப்பளை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

சுமார் 600க்கும் மேற்பட்ட பனைத்தொழில் வல்லுனர்கள் (சீவற்தொழிலாளர்கள்) நேரடியாகப் பாதிப்படைந்துள்ளனர்.

கடந்த வருடங்களில் தொழிலாளர்களது சேமிப்புப்பணத்தினையும், சங்கத்தினது இலாபத்தினையும் சேர்த்து ஏழரை இலட்சம் ரூபா செலவில் சேந்தான்குளத்தில் உள்ள வசந்தபுரம் என்ற இடத்தில் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை ஒ[illegible] உருவாக்கப்பட்டது. இன்று அத்தொழிற்சாலை இயங்க முடியாத நிலையில் உள்ளது.

இச்சங்கத்திற்கு மிகுந்த வருமானத்தினை ஏற்படுத்திக் கொடுத்த மயிலிட்டி, ஆவலை, குரும்பசிட்டி பலாலிச் சந்தி, வயாவிளான், கீரிமலை வீதிப் பகுதிகளில் இயங்கிய தவறணைகள் இன்று மூடப்பட்டுள்ளன பல இடிக்கப்பட்டுள்ளன. இதனால் வருமானத்தினை இழந்தது மட்டுமல்லாமல் பாரிய நட்டத்தினையும் ஏற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனை நிர்வகித்து வந்த சங்கத்தில் தொழில் புரிந்து வந்த 53 பணியாளர்களும் வேலையிழந்துள்ளனர்.

தற்போது இந்தத் தொழிற்சாலையில் 4 நிரந்தரப் பணியாளர்களும் [illegible] மட்டுமே தொழில் புரிகின்றனர்.

## மகேசன் மறைவு பேரிழப்பு

சண்டுக்குளி, மார்ச். 11

முதலியார் அமரர் வை. மகேசன் 1949இல் யாழ்மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜம் ஆரம்பிப்பதற்குக்காரணகர்த்தாவாக விளங்கியவர். அவரின் மறைவு எமக்குப் பேரிழப்பாகும்.

இவ்வாறு முதலியார் வை. மகேசனின் மறைவு குறித்து வெளியிட்ட இரங்கற் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சனசமூகநிலையங்களின் சமாஜத்தின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் சி. சி. வரதராஜா இந்த இரங்கற் செய்தியை விடுத்துள்ளார்.

### செய்முறைப் பயிற்சி

கைதடி வெளிக்கள நிலையத்தில் கண்ணாடி உற்பத்தி தொடர்பான செய்முறைப் பயிற்சி வகுப்புகள் வட்டாரக் [illegible] திரு. அ தங்கராசா தலைமையில் நடைபெற்றது.

## போர்த்துக்கேயர் காலத்தில் கூட நயினை அம்மன் தீண்டப்படவில்லை

### யாழ். பல்கலை இந்து மன்றம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச். 11

போர்த்துக்கேயர் காலத்தில் கூட நயினை அம்மன் தீண்டப்படவில்லை. சிப்பாய்கள் அம்மனின் திருமேனியைத் தொட்டது மட்டுமன்றி அம்மன் அணிந்திருந்த நகைகளையும் அபகரித்து ஆலயத்தை மாசுபடுத்தி விட்டனர்.

யாழ் பல்கலைக்கழக இந்து மன்றம் தனது அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது.

மார்ச் மாதம் 3 ஆம் திகதி நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகத்தைக் கண்டு இந்துக்கள் மனக் கொதிப்பு அடைந்துள்ளனர்.

நயினை நாகபூஷணிஅம்மன் ஈழத்து வரலாற்றுப் புகழ் வாய்ந்ததிருத்தலங்களில் ஒன்று என்பதை யாவரும்அறிவர்.

போர்த்துக்கேயர் போன்ற வெளிநாட்டார் இந்நாட்டில் கால் வைத்து பிரசித்தி பெற்ற இந்தத் தலங்களைச் சிதைத்த போதும் கூட நயினை அம்மனை ஆலய அர்ச்சகர் ஆலமரப் பொந்தொன்றில் வைத்துப் பாதுகாத்தார் என்ற செவி வழிச் செய்தி இற்றைவரை எவராலும் அம்மன் தீண்டப்படவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

துரதிஷ்டவசமாக அந்நியர் நம்மை விட்டுச் சென்றாலும் நம்மவர் ஆட்சியும் ஜனநாயகமும் தழைத்தோங்கும் நாடு எனப்பறைசாற்றும் இவ்வேளையில் இராணுவ அத்துமீறல் மதநிறுவனத்தையும் விட்டு வைக்கவில்லை என்று எண்ணும் போது மனம் குமுறுகிறது.

சிப்பாய்கள் அம்மனின் திருமேனியைத் தொட்டது மட்டுமன்றி அம்மன் அணிந்திருந்த நகைகளையும் அபகரித்து ஆலயத்தை மாசுபடுத்தியும் விட்டனர்.

அத்தோடமையாது ஆலயத்தின் விலைமதிப்பிற்கரிய கலைச்செல்வங்களான தேர்கள், மஞ்சம், கோயிலின் பிரதான வாயிற்கதவு, சப்பறம் போன்றனவற்றிற்கும் தீவைத்துக் கொழுத்திய நிகழ்ச்சி அநாகரிகர்கள் கையில் நாம் வாழ்கின்றோமோ என்று எம்மைச் சிந்திக்க வைக்கிறது.

எம்மதமும் சம்மதம் என்ற கோட்பாடு நிலைகொண்டுள்ள இக்காலத்தில் சமய நிறுவனங்களை அழிப்பது, சமய மாற்றம் செய்ய நினைப்பது மிகமிக காட்டுமிராண்டித்தனமாகும்.

இத்தாக்குதலின் போது கோயிற்காசாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டது மனித உரிமைகளை மீறும் மிகமிகக் கொடூரமான செய்லே தவிர வேறொன்றுமில்லை.

இத்துயரச்சம்பவங்களுக்குப் பின்னர், நயினை நாகபூஷணி அம்பிகைக்குரிய நித்திய பூசைகள் தடைப்பட்டுள்ளது. இந்துக்களது உள்ளங்களில் தாங்கொணாத வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

அரசன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும் என்பது எமது பாரம்பரியம். காலந்தான் பதில் கூறவேண்டும்.

## திவுப்பகுதியில் மீன்பிடி பாதிப்பு

புங்குடுதீவு, மார்ச். 11

கடல்வலயத் தடை உத்தரவினால் தீவுப்பகுதியைச்சேர்ந்த மீனவர்கள் தொழில் செய்ய முடியாது அவதியுறுகின்றனர்.

பகலிலும் இரவிலும் கடலுக்குச் செல்ல இவர்கள் அஞ்சுகிறார்கள். தீவுப்பகுதிக் கடல்களில் கடற்படையினர் மேற்கொண்டுள்ள தீவிர ரோந்து நடவடிக்கையே இதற்குக் காரணமாகும்

தீவுப்பகுதியில் மீன்பிடி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால் இப்பகுதியில் மீனுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

## தவற விட்ட கைப்பை வீடு தேடிவந்தது!

சுன்னாகம். மார்ச் 11

மினி ஸ்ஸில் தவற விட்ட கைப்பை வீடு தேடி வந்தது

இந்த சம்பவம் பற்றிச் சொல்லப்படுவதாவது.

சுன்னாகத்தைச் சேர்ந்தவர் திருமதி பூமணி சபாபதி. சம்பவதினம் தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்குச் சென்றுவிட்டு மினி பஸ்ஸில் வீடு திரும்புகையில் தமது கைப்பையைத் தவற விட்டு விட்டார்.

ரொக்கப் பணமாக அறுநூறு ரூபாயும் சுமார் இருநூறுரூபா பெறுமதியான மருந்து வகைகளும் மருந்துத் துண்டும் கைப்பையில் இருந்தன. மருந்துத் துண்டில் அவரது முகவரி இருந்தது.

பணத்தையும் மருந்தையும் தவறவிட்ட துக்கத்துடன் இருந்த அவருக்கு மறுநாள் மாலை ஆச்சரியம் காத்திருந்தது

கைப்பையுடன் அவரது வீட்டுக்கு வந்தார் மினிபஸ் சாரதி மாசிலாமணி சிவராசா கைப்பையை நன்றியுடன் பெற்றுக் கொண்டார் திருமதி பூமணி சபாபதி பணம் அறுநூறுருபாயும் மருந்துவகைகளும் அப்படியே இருக்கக் கண்டு பூரிப்படைந்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தரமான
போட்டோ ஸ்ரட் பிரதி
உடனுக்குடன் தெளிவாகப்
பெற்றுக்கொள்ள
SUNLIGHT
DRY CLEANERS
(பஸ் நிலைய முன்பாக)
யாழ்ப்பாணம்

# உதயன்

11. 03. 1986

வட மாகாணத்திலே
பல்லாண்டு கால தனிச்சிறப்புச் சேவை.
SUNLIGHT
DRY CLEANERS
(Opp. Bus Stand)
JAFFNA.

## வித்தாரம்

வாரும் முரளியாரே!

நீண்ட நாளைக்குப் பிறகுதான் அப்பா உன்னை இப்ப சந்திக்க முடியிறது. என்ன செய்யிறது.

பிரச்சினையளும் கூடக்கூட நேர காலத்தைக் கண்டு பிடிப்பதும் கஷ்டமாக இருக்குது.

உன்ரை அரசியல் கதைச்சும் கனநாளாய்ப் போச்சு.

ஓ அதைச் சொல்லு றியோ!

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலை இப்ப நல்லா இறுகியிருக்கு. என்னமாதிரி முடியுமெண்டு சொல்லேலாது. பூட்டு அவிழுமோ அல்லது மேலும் கூடக்கூட இறுகுமோ எண்டும் சொல்ல முடியாது.

ஆனால் இந்தியா இனியும் எங்கடை ஆக்கள் விடுகிற பேய்க்காட்டல்களுக்கு எடுபடாது எண்டு மட்டும் விளங்குது அவ்வளவுதான்.

ரண்டுமூண்டு கிழமையா இந்தியாவிலை நிண்டு டிக்ஸிற் கொழும்பு வந்திட்டார். எங்கடை நாட்டுப் பெரிய ஆளைச் சந்தித்தார். ஒரு மணித்தியாலச் சந்திப்பு. டிக்ஸிற் பொரிந்து தள்ளினாராம். கடைசி ரண்டு மூண்டு நிமிஷங்களுக்குத்தானும் அடுத்த பக்கத்தாலை இருந்து கதை வந்ததாம்'

இவையின்ரை ஆட்சேபக் குறிப்பு ஒருபடி கனம் எண்டா இந்தியாவின்ரை பதில் பலபடி கனமாம் எண்டும் கேள்வி.

பகத் ஏதோ தங்களை எக்கச் சக்கமாகச் சொல்லிப்போட்டார் எண்டு இஞ்சை தென்னிலங்கையிலை சன்னதம் ஆடிச்சினம்.

உவை சன்னதம் ஆடினு அக்கரையிலை ஏதோ பயப்படுவினம் எண்டு நினைப்பு.

இவை தெற்கத்தையார் இப்ப நல்ல வளமா மாட்டியிருகினம். சும்மா ரோட்டாலை போறவன், வீட்டிலை இருக்கிறவன் எல்லாரையும் சுட்டுப் போட்டு பயங்கரவாதியளைச் சுட்டுப் போட்டம். எண்டு விருப்புப் பேசி முழுப் பொய் சொல்லி வந்தவை. தங்கடை பொய் மூட்டைகளை உலகம் நம்பும் எண்ட நினைப்பு.

அங்கை ஜெனீவா மாநாட்டிலை சீமை; கனடா, அது இது எண்டு அடுத்தடுத்து பல தேசப் பிரதிநிதியள் இவையளை கிழிகிழியெண்டு கிழிச்சினம் பாத்தியே.

கதையுக்குள்ளை கதையாய் எனக்கு ஒரு சின்னச் சந்தேகமடா தம்பி!

இந்த நாட்டுக்கு எத்தினை பேர் தலையாரியள்? ஜனாதிபதி எண்டு ஒருத்தர் இருக்கிறார். ஆனால் தமிழர் பிரச்சினை எண்டவுடனை எல்லாரும் தலையாரியள் மாதிரித்தான் கதைக்கினம்.

இவர் அச்சாணியார் ஒருபுறம் போர்நிறுத்தம் வேணுமோ அதைக் கிழைவையுங்கோ இதைக் கொண்டு வராதைங்கோ எண்டு சொல்லுறார். அவரை விடு, அவர் நாள் ஒரு பேச்சும் தினம் ஒரு கதையும் சொல்லுவார்.

திம்புவுக்குத் தலைவராய் போனதாலையோ என்னவோ தெரியாது எச். டபிள்யூக்களும் பிரச்சினைக்கு இதுதான் தீர்வு; அதுதான் தீர்வு எண்டு சொல்வதெழுதல் சொல்லத் தொடங்கி இருக்கிறார்.

தமிழர் சம்பந்தப்பட்ட விஷயம் எண்டால் தெற்கத்தையார் எல்லாரும் தலைவராகலாம் எண்ட அளவுக்கு நாங்கள் இளக்காரமாய் விட்டோமே..?

தொண்டோடி

★ இலங்கையிடமிருந்து

# தேயிலை வாங்குவதை

# ரஷ்யா முற்றாக நிறுத்தியது

## வர்த்தக வட்டாரங்களில் பெருமளவில் தாக்கம்

கொழும்பு, மார்ச் 11

இலங்கையில் இருந்து தேயிலை கொள்வனவு செய்வதை ரஷ்யா அடியோடு நிறுத்தி விட்டது.

1986ஆம் ஆண்டில் இதுவரை ஒரு கிலோ கிறும் தேயிலையைக்கூட ரஷ்யா இலங்கையிடமிருந்து வாங்கவில்லை.

அதே நேரத்தில் இந்தியாவிடம் இருந்து தேயிலை வாங்குவதில் ரஷ்யா அதிக ஈடுபாடு காட்டுகின்றது.

1986ஆம் ஆண்டில் மட்டும் 10 கோடி கிலோ கிறும் தேயிலையை இந்தியாவில் இருந்து வாங்க ரஷ்யா தீர்மானித்துள்ளது.

இலங்கையிடம் இருந்து 1984 டிசம்பரில் 1 கோடி 20 லட்சம் கிலோகிறும் தேயிலையை வாங்கிய ரஷ்யா, 1985 டிசம்பரில் 55 லட்சம் கிலோ தேயிலையையே வாங்கியது.

1986 ஜனவரியில் இருந்து இலங்கையில் இடம்பெறும் தேயிலை ஏல விற்பனையில் கலந்து கொள்வதை ரஷ்யா நிறுத்திவிட்டது.

இது கொழும்பு தேயிலை வட்டாரங்களில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

இது சம்பந்தமாக ரஷ்யத் தூதரக அதிகாரிகளிடம் வினவப்பட்டது.

''தேயிலை கொள்வனவு இரண்டு அரசாங்கங்கள் சம்பந்தப்பட்ட ஒன்று அல்ல'' — இப்படி ரஷ்ய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கோயிலுக்கு பூட்டுப் போட்ட விஷமிகள்

கைதடி, மார்ச் 11

விஷமிகள் சிலர் கோயில் கதவுக்கு புதிய பூட்டுப் போட்டு விட்டுச் சென்றனர். பொது மக்களின் உதவியால் பூட்டு உடைக்கப்பட்டு பூசை நடந்தது.

இந்தச் சம்பவம் கைதடியில் உள்ள ஆலயம் ஒன்றில் நடந்தது.

புதிய பூட்டுப் போட்டவர்கள் ஆலயக் குருக்கள் வீட்டுக்குச் சென்று கோயில் கதவைத் திறக்கக் கூடாது, பூசை செய்யக் கூடாது என்று எச்சரித்து விட்டும் சென்றனராம்.

# இலங்கைக்கு இந்திய இராணுவம்

## அனுப்பவேண்டும் என்கிறார் ஜனதா தலைவர்

திருச்சி, மார்ச் 10

இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற இந்தியா தனது ராணுவத்தை அனுப்பவேண்டும்.

இதுதான் தனது விருப்பம் என்று தமிழ்நாடு ஜனதாக் கட்சித் தலைவர் இரா. செழியன் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழருக்கு எதிராக நடத்தப்படும் அநீதிகள் குறித்து உலக நாடுகளின் ஒருமித்த கருத்தைத் திரட்ட இந்தியா முயற்சிக்க வேண்டும் என்றும் திரு. இரா. செழியன் சொன்னார்.

## கனேடிய...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மணியம், பேராசிரியர் கா. சிவத்தம்பி, வண. பிதா மைக்கல் சாமி, டாக்டர் ஜெகா பசுபதி, திரு. எஸ். அருமைநாயகம், திரு. அரவிந்தன், வண பிதா தேவராஜா மற்றும் அன்னையர் முன்னணிப் பிரதிநிதிகள், முல்லைத்தீவுப் பிரஜைகள் குழுப் பிரதிநிதிகள் ஆகியோர் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

பிரஜைகள் குழுவினர் திரு. கொலகொட்டிடம் பின்வரும் விவரங்களை எடுத்துச் சொன்னதாக நம்பிக்கையாகத் தெரிய வருகிறது;

யாழ் மக்கள் தங்கள் உயிர், உடைமைகளுக்கு எது எந்த நேரத்தில் நடக்கும் என்று சொல்ல முடியாத நிலைமையில் வாழ்கின்றனர்.

நயினாதீவு, தாவடி மற்றும் பல இடங்களில் பாதிக்கப்பட்டவர்கள் பொதுமக்களே. ஆனால் பொய் பிரசாரம் மூலம் உண்மைகள் மறைக்கப் படுகின்றன.

உலகுக்கு மட்டும் அல்ல, சிங்கள மக்கள் கூட உண்மை நிலையை அறியமுடியாத நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது.

மீன் பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதால் 85,000 மீனவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீன் பிடித்தல் மூலம் யாழ்குடாநாடு 120 கோடி ரூபா சம்பாதித்து வந்தது.

இன்று மீன் பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதால், இந்த வருமான வீழ்ச்சி மீனவ சமுதாயத்தையே பாதித்துள்ளது.

விமானத் தாக்குதல்கள், மீன்பிடித்தல் தடை, பாதுகாப்பு வலயப் பிரகடனம் ஆகியவற்றினால் யாழ் குடாநாட்டு மக்களின் சாதாரண வாழ்க்கை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

— இவ்வாறு பிரஜைகள் குழு, கனடியத் தூதுவரிடம் எடுத்துச் சொன்னதாக அறியவருகின்றது.

# யாழ் மக்களின் திடசங்கற்பம் மனே உறுதிக்குப் பாராட்டு

## வை. டபிள்யூ. சி. ஏ. கட்டட திறப்பு விழாவில் கனேடிய தூதுவர்

யாழ்ப்பாணம், மார்ச் 11

இடர்ப்பாடுகள் மத்தியிலும், கஷ்டமான காலத்திலும்; இப்படியான கட்டடத்தை அமைத்தது யாழ்ப்பாண மக்களின் திடசங்கற்பத்துக்கும் மனோ உறுதிக்கும் ஓர் எடுத்துக்காட்டு.

யாழ்ப்பாணம் வை. டபிள்யூ சி. ஏ. ஸ்தாபனத்தின் தலைமை அலுவலகத்தை நேற்றுப் பிற்பகல் திறந்து வைத்து உரையாற்றிய இலங்கையில் உள்ள கனேடியத் தூதுவர் திரு டி. எம். கொலகொட் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:–

நான் கனடாவில் வை. எம். சி. ஏ. செயலாளராக எனது தொழிலை ஆரம்பித்தவன். அதனால் இந்த வைபவத்தில் பங்கு பற்றுவது மகிழ்ச்சி தருகிறது.

இப்பகுதியில் இன்று நிலவும் சூழ்நிலையில் வை, டபிள்யூ சி. ஏ. போன்ற இயக்கங்களின் சேவை வேறெந்தக் காலத்திலும் பார்க்கக் கூடுதலாகத் தேவைப்படுகிறது.

இப்படி அவர் கூறினார்.

திருமதி. எஸ். யேசுதாசன் வைபவத்துக்கு தலைமை வகித்தார்.

தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதின ஆயர் வண. பிதா. டி. ஜே அம்பலவாணர் பின்வருமாறு உரையாற்றினார்:–

இன்று யாழ்ப்பாண மக்கள் தடை செய்யப்பட்ட, கண்காணிப்பு வலயத்தில் அச்சத்துடன் வாழ்கிறார்கள்.

இது தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சிறைக்கைதியின் நிலை போன்றது.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவனின் மனோநிலை பலவிதமாக இருக்கும்.

அவன் தனக்குச் சீவிய காலச் சிறைத் தண்டனையாக அது மாற்றப்படமாட்டாதா என்று ஏங்குவான், வெளியுதவி கிட்டாதா என்று எதிர்பார்ப்பான். சிறையை உடைத்து வெளியேறக் கூட விரும்புவான்.

ஆனால் தமது மக்கள் தமது தாயகத்தில் சுய கௌரவத்துடன் அமைதியாக வாழக் கூடிய தீர்வைத்தான் விரும்புகிறார்கள்.

பல்வேறு கிறிஸ்தவ இயக்கங்கள் ஒரு குடையின் கீழ் மக்கள் சேவை ஆற்ற வேண்டும் என்று முதன் முதல் பத்தொன்பதாம் நூற்றுண்டில் குரல் கொடுத்த இயக்கம் வை. எம். சி. ஏ. ஆகும். கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களையும் தன்னகத்தே அங்கத்தவர்களாக கொண்டு செயற்படும் இயக்கம் இது.

இப்படி வண. பிதா. அம்பலவாணர் கூறினார்.

மக்கள் துயர் துடைக்கும் சமூகப் பணியில் இவ்வியக்கம் தொடர்ந்து ஏறு நடை போடவேண்டும் என்று கத்தோலிக்க திருச்சபை ஆயர் வண. பிதா. கு. தியோகுப்பிள்ளை கூறினார்.

செல்வி. மேபல் தம்பையா நன்றியுரை கூறினார்.

# கெங்காதேவி

## செல்வராஜா மீதான தண்டனை குறித்து புலிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 11

தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

அதன் விபரம் வருமாறு:–

சிறீலங்கா இனவெறி அரசு தன் பிரசார சாதனங்களின் மூலம் தமிழீழ மக்களிடையே குழப்பத்தை தோற்றுவிக்கப் பகீரத பிரயத்தன முயற்சி செய்து வருவது கண்கூடு.

ஆனால் எம் மக்கள் லங்காபுவத்துடன் இணைந்த தொலைக்காட்சி வானொலிச் செய்தியின் உண்மை நிலையை தெளிவாகவே உணர்வர்.

நெருக்கடி மிக்க இன்றைய காலக்கட்டத்தில் இன்றும் தம் சுயநலனிற்காக தமிழ் பேசும் மக்கள் அனைவரினதும் உயிரின் ஒளியாகிய தமிழீழ விடுதலைப் போராட்டத்தை எதிரிக்குக் காட்டிக் கொடுக்கும் முயற்சிகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

தமிழ் பேசும் எவர் ஒருவரையும் பயங்கரவாதியாக்கி கொன்று குவிக்கும் அரச இராணுவத்திற்கு இன்றும் துணை போவோரை நாம் எச்சந்தர்ப்பத்திலும் மன்னிக்க முடியாதவராயுள்ளோம்.

இவ்வாறு அரசிற்கு துணை போவோர், காட்டிக் கொடுப்போர் சுட்டுக் கொல்லப்படும்போது அரசின் பிரசார சாதனங்கள் பல்வேறு புனைகதைகளை சூழ்ச்சியின் அடிப்படையில் புனைகின்றன.

இந்த வகையில் கடந்த 4ஆம் திகதி மார்க்கண்டு கெங்காதேவி எனும் பெண் சகல இயக்கத்தினரின் முகாம்களைப்பற்றியும், போராளிகளின் நடமாட்டத்தைப் பற்றியும் தகவல் கொடுத்தும் —

கிளிநொச்சி முகாம் இராணுவ அதிகாரி ஒருவருடனும், கொழும்பு தலைமையலுவலக அதிகாரி ஒருவருடனும் தூர்நடத்தையிலீடுபட்டும் — மாங்குளம், கொழும்பு, ஈரப்பெரியகுளம், கிளிநொச்சி இராணுவ முகாம்களுடன் நேரடித் தொடர்பு கொண்டும் — காட்டிக்கொடுத்து வந்துள்ளார்.

இவர் மீதான விசாரணை நிருபிக்கப்பட்டபின் இவருக்கு மரண தண்டனை விடுதலைப் புலிகளால் விதிக்கப்பட்டது.

இதேபோல் பரந்தன் செல்வராஜா, இராணுவ முகாமுடன் நேரடித் தொடர்பு கொண்டு போராளிகளை காட்டிக் கொடுத்து வந்துள்ளார்.

இவருக்கு இராணுவத்தினர் ஆயுதங்களை இயக்கும் அறிவைக் கொடுத்ததுடன் தற்பாதுகாப்பு நடவடிக்கையையும் பயிற்றுவித்தனர். வெளியே திரிந்து போராளிகளை பிடிக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

இவரும் தீர விசாரிக்கப்பட்டு நிருபிக்கப்பட்டபின் விடுதலைப் புலிகளால் மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டார்.

ஆனால் லங்காபுவத், மார்க்கண்டு கெங்காதேவி பயங்கரவாதிகளால் கெடுக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் இயக்க மோதல்களில் பரந்தன் செல்வராஜா கொல்லப்பட்டார் என்றும் கூறியது.

இவை போன்று தினம் தினம் தமிழீழ மக்களை குழப்பத்திலாழ்த்தும் முயற்சிகள் சிறீலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை குறித்து தமிழீழ மக்களுட்பட அனைவரும் விழிப்பாயிருந்து உண்மை நிலை தெரிந்து செயற்பட வேண்டுகிறோம்.

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலை புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடபகுதி . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ரொக்கப் பணம் வழங்குமாறு நேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஐந்து அங்கத்தவர்களும் அதற்குக் குறைந்த அங்கத்தவர்களும் கொண்ட மீனவர் குடும்பங்களுக்கு மாதாந்தம் இருநூறு ரூபா வழங்கப்படும் 5 அங்கத்தவர்களுக்கு அதிகமாக உள்ள மீனவர் குடும்பங்களுக்கு இருநூற்று ஐம்பது ரூபா வழங்கப்படும்.

## யானை தாக்கி மரணம்

கிளிநொச்சி மார்ச் 11

கிளிநொச்சி ஊற்றுப் பிள்ளையார் கோவில் அருகில் கொட்டில் வீடு ஒன்றில் தனியாக இருந்த 16 வயது இளைஞர் ஒருவர் யானையால் தாக்குண்டு மரணமானார்.

பட்டிகாமம் சலகா என்னுமிடத்தில் இருந்து ஊற்றுப் பகுதியில் வந்து குடியேறிய லெட்சுமணன் திருமூர்த்தி என்பவரே இறந்தவராவர்.

## பன்குளத்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கிறார்கள்.

கொல்லப்பட்டவர்களில் ஆறுபேர் சிங்களவர். இருவர் தமிழர்கள்.

நீர்ப்பாசன திணைக்களத்துக்குச் சொந்தமான ஜீப் ஒன்றில் சென்று கொண்டிருந்தவர்களே இவ்வாறு பலியாகினர்.

மொறவெவ பகுதியில் வைத்து அடையாளம் தெரியாதோர் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

போராளிகளே துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

படுகாயமடைந்த மூன்று பேர் முதலில் திருகோணமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். எனினும் மூவரும் ஆபத்தான நிலையில் இருப்பதால் அவர்கள் பின்னர் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அவசர அவசரமாகக்கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து மொறவெவ பகுதி சீருடையினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

அப்பகுதியை சீருடையினர் சல்லடை போட்டுத் தேடி வருவதாக இரவு பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## கூட்டணி - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கையை முன் வைத்துபேச்சுக்கள் நடத்துவதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நோக்கம் என்றால், பேச்சுவார்த்தைகளில் கூட்டணி கலந்து கொள்ள வரத்தேவை இல்லை.

ஆனால் இனப்பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் தான் தீர்க்கப்பட வேண்டும். பேச்சுக்கள் மூலம் தான் தீர்வு காண [illegible]

இப்படி அமைச்சர் அத்துலத்முதலி சொன்னார்.

# கனடா தூதரிடம்

## அன்னையரின் இரு கோரிக்கைகள்

யாழ்ப்பாணம், மார்ச்.11

யாழ். அன்னையர் முன்னணி, கனடா தூதுர் திரு. டி. எம். கொலெகொட்டிடம் இரண்டு கோரிக்கைகளை விடுத்துள்ளது.

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் கிளை இயங்க அனுமதிக்கும்படி இலங்கை அரசைக் கனடா தூண்ட வேண்டும்.

2. விரைவான அரசியல் தீர்வு ஒன்றைக்காண நடவடிக்கை எடுக்கும்படி இலங்கை அரசின் மீது கனடா தனது செல்வாக்கைப் பிரயோகிக்க வேண்டும்.

இந்த இரண்டு கோரிக்கைகளும் அடங்கிய மகஜர் ஒன்றை யாழ். அன்னையர் முன்னணி நேற்று கனடாத் தூதுர் திரு. கொலெகொட்டிடம் கையளித்தது.

## மட்டக்களப்பு....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லடி சாந்தி தியேட்டருக்கு அருகாமையில் வைத்து காரில் வந்த பிரபல கட்டட ஒப்பந்தக்காரர் ஒருவரை ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் மறித்தனர். காருடன் சேர்த்து அவரைக் கடத்த முயன்றனர்.

இந்த முயற்சியின் போது ஒப்பந்தக்காரர் தற்பாதுகாப்புக்கு வைத்திருந்த ரிவோல்லரை இளைஞர்கள் தட்டிப் பறித்தனர்.

இளைஞர்கள் காருக்குள் ஏற முயன்றபோது ஒப்பந்தக்காரர் அதைத் தடுத்தார். காரை வேகமாக ஓட்டித் தப்பிச் சென்றார்.

ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தபின்னர், மோட்டார் சைக்கிளில் காரைக் கலைத்துச் சென்றனர்.

இதன் பின்னர்—அரை மணி நேரம் கழித்து—சம்பவம் நடந்த கல்லடிச் சந்தியிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ள ஆரையம்பதி கிராமத்தை சீருடையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

அங்கு சீருடையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் தமிழர் ஒருவர் பலியானார். இறந்தவர் இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது.

ஐந்து இளைஞர்கள் சீருடையினரால் கைது செய்யப்பட்டனர்.

அப்பகுதியிலிருந்தகண்ணகி அம்மன் ஆலயம் ஒன்றும் சேதமாக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் பிற்பகல் மூன்று மணியளவில் நொச்சி முனைப்பகுதியில் தேடுதல் தொடர்ந்தது.

அப்பகுதியை சீருடையினர் சுற்றி வளைத்த போது அங்கு குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன அதனைத் தொடர்ந்து சீருடையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இரண்டு பேர் சூட்டுக்குப் பலியாகினர். சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை நேற்றுக் காலை உன்னிச்சைப் பகுதியில் அறுவடை செய்து கொண்டிருந்த விவசாயி ஒருவர் தேடுதல் நடத்திய சீருடையினரின் வேட்டுக்குப் பலியானார். அப்பகுதியில் வைத்து மேலும் நான்கு விவசாயிகள் கைது செய்யப்பட்டனர்.

## துணுக்காயில் தேடுதல்

யாழ்ப்பாணம், மார்ச் 11

நேற்றுக் காலை 10 மணியளவில் துணுக்காய் பகுதியை இராணுவத்தினர் சுற்றி வளைத்தனர். 15 [illegible] ளில் வந்த சீருடையினர் அப்பகுதியில் பலத்த தேடுதலில் ஈடுபட்டனர்.

## பார்த்தசாரதியின் . . .

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

சாரதி ராஜினமாச் செய்து விட்டார்.

அன்றைய தினமே அவர் தனது ராஜினமாக் கடிதத்தைப் பிரதமரிடம் கையளித்துவிட்டார்.

ஆனால் பிரதமர் ராஜினமாக் கடிதத்தை ஏற்கமறுத்து விட்டார். இப்படி இந்திய செய்தி ஸ்தாபனம் ஒன்று செய்தி வெளியிட்டது.

பிரதமரின் வட்டாரங்கள் இதனை மறுப்பதாக இன்னொரு செய்தி ஸ்தாபனம் வேறு ஒரு செய்தியை வெளியிட்டது.

இப்பொழுது 'இன்டியா ருடே' சஞ்சிகையில் இது பற்றி மேலும் விவரங்கள் வெளியிடப் பட்டுள்ளன.

கடந்த நான்கு மாதங்களாக திரு பார்த்தசாரதி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசியதே இல்லை.

ஓய்வு பெறப்போகும் திரு. ரொமேஷ் பண்டாரி கொள்கை வகுப்புக்குழுத் தலைவராக நியமிக்கப்படலாம் என்ற செய்தியும் திரு. பார்த்தசாரதிக்கு மனச்சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

காலையில் காப்பி குடிக்கும் சமயம் பத்திரிகைகளை வாசிக்கின்றேன். அப்போதுதான் இந்திய வெளிநாட்டுக் கொள்கை பற்றி எனக்குத் தெரியவருகிறது — இப்படி திரு. பார்த்தசாரதி நெருங்கிய நண்பர் ஒருவரிடம் கூறி வருத்தப் பட்டாராம்.

இப்படி 'இன்டியா ருடே' சஞ்சிகையில் கூறப்பட்டுள்ளது.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நஷ்ப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 11-03-1986

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ 60/N/86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org